# Centre Tamoul d'Enseignements en France

# பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையம்

## தமிழ்ப் பேச்சுப் போட்டி - 2022

15 வயதுக்குட்பட்டவர்கள்

---

## தமிழர் கலைகள்

மானுட வாழ்வின் சிறந்த வெளிப்பாடு கலையாகும். கலை என்பது ஒருவன் அனுபவித்த உணர்வை தன் உள்ளத்தில் எழுப்பி அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், சொல் அல்லது சொல்வடிவங்கள் மூலம் அந்த உணர்வை பிறரும் உணரும்படி செய்வதாகும். தமிழர் தம் நீண்ட வரலாறு நெடுக கலைகளை பேணி வளர்த்து வந்துள்ளார்கள்.

இசை, ஓவியம், சிற்பம், ஆட்டம், கூத்து, நாட்டியம், நாடகம், கட்டிடக்கலை போன்ற கலைகளில் தமிழர் சாதனைகள் அதிகம். இயற்கையோடு இசைந்த வாழ்வில் இசையைக் கற்றுணர்ந்த தமிழர் அதனை வாழ்வின் தொழில்நிலைகளுக்கு ஏற்ப வகுத்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைக்கும் இசையை வகுத்தனர். இவ் இசைவடிவங்களைக் கொண்டே செவ்வியலிசையும், செவ்வியல் ஆட்டங்களான கூத்தும், கூத்தில் இருந்து அபிநயக்கூத்தான பரதநாட்டியமும் உருவாக்கப்பட்டது.

இதனைப் போலவே வாழ்வியல் சட்டங்களிலிருந்து ஓவியங்களும், சிற்பங்களும் தோன்றி செவ்வியல் கலைகளாக மாறியது. தமிழர்களின் சிற்பக்கலைக்கு மாமல்லபுரமும், கட்டிடக்கலைக்கு தஞ்சை பெரியகோயிலும், ஓவியத்திற்கு சித்தன்னவாசலும் உலகப்புகழ் பெற்றவை. தமிழர் ஆடற்கலையும் உலகப்புகழ்பெற்றது. மக்கள் அவையில் ஆடப்பட்ட ஆடல் பொதுவியல் எனவும், அரசவையில் ஆடப்பட்டது வேத்தியல் எனவும் வகுக்கப்பட்டது. தமிழர் கலைத்திறனை சிறப்பாக கூறும் நூல் இளங்கோஅடிகள் எழுதிய சிலப்பதிகாரம். வாழ்வியல் நூலான இது தமிழர் கலைகளைப் பற்றிய பல தகவல்களை தருகின்றது. தமிழர் நவீன கலைகளையும் வளர்த்து வருகின்றார்கள். நவீன நாடகம், குறும்படம், திரைப்படம் போன்ற கலைவடிவங்களிலும் அண்மைக்காலத்தில் உலகப்புகழ் பெற்ற படைப்புகள் உருவாகிவருகின்றன.

நன்றி